








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி


மலர் 2 இதழ் 23 18.06.2026




முதலாழ்வார்கள் அனுபவம்



ஆசார்ய தேவோ பவ



@vishnuprabhanc
@vishnuprabhanc
Vishnu
VishnuArts
@vishnuprabhanc






ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# முத்துக்கள்
# ஸ்வாமி தேஸிகனின் ப்ரதான சதகம்

**பின் இதழின் தொடர்ச்சி**

21. இப்படி ப்ரணவத்தில் பிறந்த தத்வ ஞானம், மோக்ஷத்தை பெற (அடையும் வழிகளில்) சொல்லப்பட்ட க்ஞானங்களில் ப்ரதானமாகும்.

22. இப்படி தத்துவங்களை சரியாகப் புரிந்துக்கொண்டவனுக்கு. ஸ்வரூபத்தில் தெளிவான ஞானம் கொண்டவனுக்கு, 'நமோ' என்ற எட்டெழுத்து மந்திரத்தின் நடுப்பகுதியில் சொல்லப்பட்ட அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியை உணர்வது ப்ரதானம் (நம, என்பது எதுவும் எனதல்லஎன்பது பொருள்)

23. இதில் "ந்யாஸ : பஞ்சாங்க ஸம்யுக்த" என்கிற (அதாவது ந்யாஸம் என்பது ஐந்து அங்கங்களுடையது என்று தெளிந்து. அதாவது ஆநுகூல்ய ஸங்கல்பம் ப்ராதிகூல்யவர்ஜனம். மஹாவிச்வாஸம் முதலியன) பின்பற்றவேண்டியது ப்ரதானம்

24. இப்படி தன்னை ஸமர்ப்பிப்தலும், தன்னை காப்பாற்றிக்கொள்ள சக்தியில்லாமையை உணர்ந்து "ஆத்ம ரக்ஷா பரஸமர்ப்பணமே" சிறந்ததாகும் என்பது ப்ரதானம்.

25. இப்படி செய்வது "மாமேகம் சரணம்" வ்ரஜ என்ற விதிவாக்யத்தினாலே (பகவத் கீதை) செய்யவேண்டியது என்பதை அறிவது ப்ரதானம்.

26. இப்படி தன்னை ஸித்தோபாயமாக காட்டியருளிய (தான் உபாயத்தை நடத்துபவர்) நிலையில் நிற்பவனும் அவனே ஸர்வகாரணத்வம், ஸ்வதந்த்ரன். அறியப்படமுடியாதவன் என்பதால், "ப்ரபத்தி" யே அவனை அடையும் உபாயம் என்று அறிவது ப்ரதானம்

27. இந்த "நம" என்ற நடுப்பதத்தில் திருவஷ்டாக்ஷரத்தில் நடுவில் வருவதற்குக்காரணம் பகவான் ஸாத்யோபாய (அடையப்பட வேண்டியவன்) என்பதை தெளிவிக்கப்படுகிறது என்பது அறிவது ப்ரதானம்".

28. ஸௌக்ஷ்மமாக இந்த (திருவஷ்டாக்ஷரத்தில்) அவனுக்கு (பரமனுக்கு) இருக்கும் சுதந்தரத்தை மறுத்துக்கூறுவதை மறுப்பது ப்ரதானம் (கர்மமே பலன் தருகிறது என்றால் ஈச்வரன் எதற்கு என்றும் வாக்ய யோஜனகளில்)

29. "நமன நாமவான்" என்று அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் என்று "சூக்ஷ்மம்" கூறப்பட்டது. ந என்பது உபாயத்தையும் என்பது முக்யமானது என்பதையும் பகவானையும் சொல்லுகிறது.புருஷோத்தமனை அடைய "நமனம்" (என்னுடையது அல்ல) என்பது உபாயமாகும்.

30. பகவான் தானே ஸித்தோபாயமாக வெளிப்பட்டால் அதை அனுஸரிப்பதே ப்ரதானம்.

31. இப்படி நம: என்ற பதத்தை உரிச்சொல்லாக கொண்ட நாராயண பதத்துக்கு உள்ள பதங்களை பிரித்துச்சொன்னால் முதல் பகுதி ப்ரதானமாக கொள்ளப்படுகிற "நாரங்களின் இருப்பிடமானவனுக்குகே எல்லாம் என்பது தெளிவது ப்ரதானம்".

32. இப்படி திருமந்திரத்தின் பொருள் விளக்க செய்யும் சொற்களின் சேர்க்கைகளில் ஏற்படும் வேறுபாடுகளில் ஏற்படும் நிலைகளில், காணும் மற்றும் அடையும் பயன்களில் ஏற்படும் விளைவில் ஒன்றாகவே இருக்கும் என்று அறிவது ப்ரதானம் (எப்படி பொருள் கூறினாலும், பலன் ஒன்றே)

33. "சரணாகதி" மந்த்ரங்களில் "த்வயம்" மிகவும் முக்கியமாகும். சரணாகதிக்காக ஏற்பட்டிருக்கிற பல மந்த்ரங்களில் த்வயம் மிகவும் ப்ரதானம். திருமந்த்ரத்தில் அருளப்பட்ட சரணாகதி தத்துவம் த்வயமந்த்ரத்திலேயே விவரிக்கப்படுகின்றன என்பது அறிவது ப்ரதானம்.

34. இதில் சரிய: பதியினுடைய திருவடிகளை உபாயமாகப் பற்றச் சொல்லியிருப்பதாகவும் ச்ரியபதித்வத்தின் நேராக ஸ்வரூபாதிகள் திவ்யமங்கள் அர்ச்சை விக்ரஹங்கள் வரை பலன் தரவல்லது என்பதை நினைப்பது ப்ரதானம் (பகவானின் 5 ரூபங்களில் அதிகாரிகளுக்கு ஏற்றவகையில்) இந்த உபாயம் கைகூடும்

35. இப்படிச் சொன்னவன் "ப்ரபத்தி" என்ற நிலையில் செய்தால் பலன் இருக்கும்.

36. ஸித்தோபாயமாக இருக்கும் பகவானுக்கு, அதன் தன்மையை விவரிப்பது அவனது திவ்யகுணங்கள்.

37. ப்ரபத்தி சாஸ்த்ரத்தை "சரணாகதி" சாஸ்த்ரத்தை விளக்குமவைகளில் பகவத் சாஸ்த்ரம் ப்ரதானம். பகவத் சாஸ்த்ரம் என்பது மஹாலக்ஷ்மி தாயாருக்கு பகவான் ஐந்து இரவுகளில் உபதேசித்த சாஸ்த்ரமாகும். இதை பாஞ்சராத்ர சாஸ்த்ரம் என்றும் அழைப்பர்.

38. இதில் சொல்லப்பட்ட அர்த்தங்களை பொய்யில் பாடல்களாக பாடிய ஆழ்வார்கள் அருளிச்செயல் (நாலாயிர திவ்விய ப்ரபந்தம்) ப்ரதானம் என்று உணரவேண்டும் (நான்கு வேதங்களே நாலாயிரம் பாடல்கள் ஆனது என்பர்)

39. இதை விளக்கும் நூல்களில் "சரண்ய தம்பதிகளின்"  (அபயம் ஸர்வ பூதேப்யோ ததாம்யேதி வரதம் மம) என்ற அபய ப்ரதான வாக்கியங்கள் தந்தருளிய ஸ்ரீமத் ராமாயணம் ப்ரதானம் என்று அறியவேண்டும்.

40. ந்யாஸம் போன்ற உபாஸனைகளை தெரிவிக்கிற வித்யைகளில் மற்றும் சாஸ்த்ரங்களின் உண்மைகளை புரிந்துகொள்ள மஹாபாரதம் ப்ரதானம் மஹாபாரதத்தை ஐந்தாவது வேதம் என்கிறார்கள். ..............................தொடரும்